(உ) ஒரு டன் நெல்லை இவ்வரிசி ஆலையில் அரைக்க ரூ. 10·03 செலவாகிறது.

(எ) தனியார் அரிசி ஆலையில் ஒரு டன் நெல் அரைக்க விதித்துள்ள கட்டணம் ரூ. 10·20 ஆகும்.

திரு. ஏ. அ. சுப்பராஜா : அரசாங்கம் நடத்துகிற நவீன ஆலையிலே நல்ல ரக நெல்லை அரைவைக்குக் கொடுத்ததிலே 70,72 சதவீதம் வரை அவுட்டர்ன் கிடைக்கிறது. ஆனால் அதே நேரத்திலே அதே நெல்லை தனியார் துறையிலே அரைப்பதற்கு ஒப்பந்தம் செய்கிறபொழுது 65 சதவீதம்தான் ஒப்பந்தம் செய்துகொள்ளப்படுவதாகக் கேள்விப்படுகிறேன். இந்த வித்தியாசத்தால் நமக்குக் கிடைக்கின்ற லாபம் அவர்களுக்குக் கிடைக்கக்கூடிய அளவில் இருக்கிறது. ஆகவே, இதைத் தடை செய்வதற்கு அரசாங்கம் ஏற்பாடுகள் செய்யுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இந்த நவீன ஆலை ஏற்படுத்தியதே அதற்காகத்தான். திருவாரூரிலே நவீன ஆலையை அந்த முறையில் தான் ஏற்படுத்தி இருக்கிறோம். தனியார் துறையில் ஒப்பந்தம் செய்வதைப் பொறுத்த வரையில் தவறு இருந்தால், அது பரிசீலிக்கப்படும்.

திரு. நா. காசிராமன் : திருவாரூரில் உள்ள நவீன ஆலையில் ஒரு நாளைக்கு எவ்வளவு டன் அரைக்க முடியும், ஒரு வருடத்திற்கு எவ்வளவு டன் அரைக்க முடியும் ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஒரு வருடத்திற்கு 28,800 டன் நெல் அரைக்கலாம் என்று திட்டமிடப்பட்டிருக்கிறது. இதை ஃபேஸ்ட் புரோகிராமிலே ஆரம்பித்திருக்கிறார்கள். இதுவரை 38 லட்சம் ரூபாய் செலவழிக்கப்பட்டு தொடங்கப்பட்டிருக்கிறது. இதனுடைய முழுப் பலனையும் பின்னால்தான் சொல்ல முடியும்.

நகராட்சிக்குக் குடிநீர்த் திட்டம்

* 387 வின.—**திரு. எஸ். சிவசுப்பிரமணியன் :** மதிப்பிற்குரிய மருத்துவத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதில் அளிப்பாரா—

(அ) சிதம்பரம் நகர மன்றத்திடமிருந்து, குடி நீர்த்திட்டம் மேலும் விஸ்தரிக்க எஸ்டிமேட் தயாரிக்கப்பட்டு அதற்காக உதவி மானியம் கேட்டு அரசாங்கத்திற்குக் கோரிக்கைகள் ஏதேனும் வந்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) and (இ) சிதம்பரம் நகராட்சிக்கான குடிநீர் வழங்கு மேம்பாட்டுத் திட்டத்தின் முதல் கட்ட வரைவு மதிப்பீடுகள் தலைமைப் பொறியாளரிடமிருந்து வந்துள்ளன. இதன் முதலீட்டுச் செலவு ஏறத்தாழ ரூ. 3·24 லட்சம் ஆகும். இத்திட்டத்திற்கு அரசு ஒப்புதல் அளித்து, அதைச் செயல் படுத்துவதற்கு ரூ. 2·24 லட்சம் கடனுதவி அளித்தல் வேண்டும் எனக் கோரும், சிதம்பரம் நகராட்சி மன்றத் தீர்மானம் ஒன்று 14—6—1967 அன்று வந்துள்ளது. இத்திட்டத்தை அரசு பரிசீலித்து வருகிறது.

திரு. எஸ். சிவசுப்பிரமணியன் : சார், சிதம்பரம் ஒரு பெரிய நகரம். ஜனப் பெருக்கம் அதிகமாகியிருக்கிறபடியால், இப்பொழுது இருக்கிற குடிநீர்த் திட்டம் போதாது. ஆகையால் நம்முடைய அரசானது உடனடியாக இந்தத் திட்டத்தை நிறைவேற்ற முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : கனம் உறுப்பினர் குறிப்பிட்ட காரணமாகத்தான் அந்தத் திட்டம் பரிசீலிக்கப்பட்டு வருகிறது.